( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-08

## வினாத்தாள் - I

சுட்டெண்:- ..................................................

நேரம் :- 1 மணித்தியாலம்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  - **உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
  - **மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**

(01) உருவரிசையில் அடுத்து வரவேண்டிய உருவினைத் தெரிவு செய்க.





.........................

(1) 

(2) 

(3) 

(02) **உரு A**  **உரு B** 

உரு A யில் காணக்கிடைக்கும் உரு B யைப் போன்ற வடிவங்களின் எண்ணிக்கை,

(1) 9 (2) 8 (3) 10


(03) கீழே முதலில் தரப்பட்டுள்ள கூற்று பிழையானதற்கான காரணத்தைக் குறிக்கும் விடையைத் தெரிவு செய்க.


புகையிரதச் சில்லு காற்றுப் போனமையினால் அன்றைய புகையிரதம் தாமதித்தே வந்தது.

(1) புகையிரதத்தில் அதிக எண்ணிக்கையிலான சில்லுகள் இருப்பதால், ஒரு சில்லில் காற்றுப் போனாலும் புகையிரதத்தால் பயணிக்க முடியும் என்பதனாலாகும்.


(2) புகையிரதச் சில்லு மாற்றுவது கடினமான காரியமல்ல என்பதனாலாகும்.


(3) புகையிரதத்தில் இரும்புச் சில்லுகள் இருப்பதால் காற்றுப் போகாது என்பதனாலாகும்.

(04)  இவ்வுருவின் அடுத்த நிலை  எனின்,  இவ்வுருவின் முதல் நிலை என்னவாக இருக்கும்,

(1) 

(2) 

(3) 

(05) 

இவ்வுருவினால் குறித்துக் காட்ட முடியாத மூன்று சொற்கள்,


(1) பந்துகள் - சிவப்பு நிறப் பந்துகள் - சிறிய சிவப்பு நிறப் பந்துகள்

(2) உலகம் - இலங்கை - தென் மாகாணம்

(3) பாடசாலை - வகுப்பு - மைதானம்

(06) புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாளில் நீங்கள் கட்டாயமாக எழுத வேண்டியது,

(1) உமது சுட்டெண் (2) உமது பெயர் (3) பாடசாலையின் பெயர்

(07) 

இத்திண்மம் ஒரேயளவான சிறிய கனவுருக்களை ஒன்றுடன் ஒன்று ஒட்டியதன் மூலம் அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, இத்திண்மத்தை கனவுரு ஒன்றாக அமைப்பதற்கு இன்னும் தேவைப்படும் சிறிய கனவுருக்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை,

(1) 8 (2) 9 (3) 10

(08) 700 மீற்றர் நீளமான புகையிரதமொன்று 300 மீற்றர் நீளமான சுரங்கப் பாதையினூடாக பயணித்தது. அப்புகையிரதம் முழுவதுமாக சுரங்கப் பாதையைக் கடப்பதற்கு எவ்வளவு தூரம் பயணிக்க வேண்டும்?

(1) 700m (2) 300m (3) 1000m

(09) மூன்று மனிதர்கள் ஒரே இடத்தில் இருந்து புறப்பட்டு நான்கு மணித்தியாலங்கள் நடந்து 12 கிலோமீற்றர் தூரம் சென்றனர். அதன்படி, ஒரு மணித்தியாலத்தில் ஒரு மனிதன் நடந்த தூரம்,

(1) 4 கிலோமீற்றர் (2) 3 கிலோமீற்றர் (3) 2 கிலோமீற்றர்

(10) கீழே தரப்பட்டுள்ள கோலத்தை அவதானித்து A, B ஆகிய வெற்றிடங்களுக்குப் பொருத்தமான எண்களை தெரிவு செய்க.

2 ▷ 5 ⇨ 20

6 ⇨ 24 ▷ 27

4 ▷ ....A.... ⇨ ....B....



(1) A = 7 , B = 28

(2) A = 16 , B = 19

(3) A = 9 , B = 32

kalvi.lk


(11) கீழே A, B ஆகிய உருக்களால் ஒரேயளவான இரண்டு பாத்திரங்கள் நீரில் நிரப்பப்பட்டு சாய்ந்திருக்கும் இரண்டு சந்தர்ப்பங்கள் காட்டப்பட்டுள்ளன. இரு உருக்களும் வரையப்பட்டுள்ள முறைகளின்படி,

உரு A  உரு B 

(1) உரு A தவறானது. உரு B சரியானது.

(2) உரு A சரியானது. உரு B தவறானது.

(3) இரு உருக்களும் தவறானவை.

(12) 


இயந்திரமொன்றுக்குப் பொருத்தப்பட்டுள்ள மூன்று பற்சில்லுகள் இவ்வுருவில் காட்டப்பட்டுள்ளன. இம்மூன்று பற்சில்லுகளில் மிகக் கூடிய வேகத்தில் சுழலும் பற்சில்லு,


(1) A பற்சில்லு (2) B பற்சில்லு (3) C பற்சில்லு

(13) குமார் 1 ஆவது சந்தர்ப்பத்தில் தெற்குத் திசையில் சென்று, 2 ஆவது சந்தர்ப்பத்தில் தனது வலதுக் கைப்பக்கம் திரும்பி சிறிது தூரம் சென்று, 3 ஆவது சந்தர்ப்பத்தில் மீண்டும் தனது வலதுக் கைப்பக்கம் திரும்பி சிறிது தூரம் பயணித்தான். 1 ஆவது சந்தர்ப்பத்தில் பயணிக்கும்போது அவனது நிழல் அவனது வலதுக் கைப்பக்கத்தில் விழுந்திருந்தது எனின், 3 ஆவது சந்தர்ப்பத்தில் பயணிக்கும்போது அவனின் நிழல் விழுந்திருந்தது,


(1) அவனது இடதுக் கைப்பக்கத்திலாகும். (2) அவனுக்கு முன்னால் (3) அவனுக்கு பின்னால்

(14) திவ்யாவின் வயதுடன் 4 வருடங்களைக் கூட்டினால் அவளது வயது ரோகினியின் வயதை விட 3 வருடங்கள் குறைவானதாகும். ரோகினியின் தற்போதைய வயது 16 வருடங்களாயின், திவ்யாவின் தற்போதைய வயது,


(1) 13 (2) 9 (3) 12

(15) 

A



B




C


மேலேயுள்ள இலக்கங்கள் எழுதப்பட்டுள்ள A, B, C ஆகிய 3 கார்ட்போர்ட் அட்டைகளையும் தலைகீழாகப் பார்க்கும்போது வித்தியாசமாகக் காணக்கிடைக்கும் கார்ட்போர்ட் அட்டை,

(1) A (2) B (3) C

(16) இம்ரான், ரவி, நாதன் ஆகிய மூன்று போட்டியாளர்கள் மரதன் ஓட்டப் போட்டியொன்றை நிறைவு செய்த நேரங்கள் கீழே கடிகார முகங்களினால் காட்டப்பட்டுள்ளன.


இம்ரான் 


ரவி 


நாதன் 



மேலேயுள்ள நேரங்களின்படி, மரதன் ஓட்டப் போட்டியில் 1, 2, 3 ஆகிய இடங்களைப் பெற்றுக்கொண்ட போட்டியாளர்களின் பெயர்களை ஒழுங்குமுறையில் எழுதினால் கிடைப்பது,

(1) ரவி - இம்ரான் - நாதன் (2) நாதன் - இம்ரான் - ரவி (3) இம்ரான் - நாதன் - ரவி

(17) 


ஊன் உண்ணிகள், தாவர உண்ணிகள், யானை என்பவற்றுக்கிடையிலான தொடர்பினைக் காட்டுவதற்கு இவ்வுரு வரையப்பட்டுள்ளது. இவ்வுருவில் தாவர உண்ணிகளைக் காட்டும் எழுத்து,

(1) A (2) B (3) C


(18) 



இந்த கூட்டினுள் காணப்படும் குறியீடுகளுக்கான பெறுமதிகளின் கூட்டுத்தொகைகள் கிடையாக தரப்பட்டுள்ளன. அதன்படி, □ இக்குறியீட்டின் பெறுமதி,

(1) 7 (2) 5 (3) 8

(19) குறித்த வருடமொன்றில் பெப்ரவரி மாதத்தின் முதல் நாளும் கடைசி நாளும் புதன்கிழமையாகும். அதன்படி, அம்மாதத்தில் உள்ள நாட்களின் எண்ணிக்கை,

(1) 28 (2) 29 (3) 30

(20) உரு A 


உரு B 


உரு A யில் காட்டப்பட்டுள்ள கனவுருவிலிருந்து உரு B யில் காட்டப்பட்டுள்ளவாறான சதுரமுகிகள் எத்தனை வெட்டலாம்?




(1) 9 (2) 16 (3) 12

kalvi.lk

சுட்டெண்:-..........................................

(21) உருவில் காட்டப்பட்டுள்ள கம்பித் துண்டை இரு நுனிகளும் சந்திக்குமாறு குறிக்கப்பட்டுள்ள இடங்களினால் மடிப்பதன் மூலம் உருவாக்கக்கூடிய வடிவம்,







(1)  (2)  (3) 

(22) கொழும்பிலிருந்து அம்பாந்தோட்டை நகரிற்கு சென்ற ஒரு பேருந்து சில நகரங்களைக் கடந்து சென்ற விதம் கீழே காட்டப்பட்டுள்ளது. பேருந்து காலி நகரத்தைக் கடந்து செல்வதற்கு முன்னர் களுத்துறை நகரத்தைக் கடந்தது. பேருந்து காலி நகரத்தைக் கடந்து சென்ற பின்னர் மாத்தறை நகரத்தைக் கடந்து சென்றது. பேருந்து அம்பாந்தோட்டை நகரத்திலிருந்து கொழும்பு நகரத்திற்கு அதே பாதையில் திரும்பி வரும்போது அந்த நகரங்களைக் கடக்கும் ஒழுங்குமுறை,

(1) களுத்துறை - காலி - மாத்தறை (2) காலி - மாத்தறை - களுத்துறை (3) மாத்தறை - காலி - களுத்துறை

(23) கீழே தரப்பட்டுள்ள மூன்று கார்ட்போர்ட் அட்டைகளில் உள்ள சிறிய சதுர வடிவங்கள் ஒன்றுக்கொன்று சமனாகும். அதன்படி, புள்ளிக்கோடுகளின் வழியே மடிப்பதன் மூலம் ஒரு சதுரமுகியை அமைத்துக்கொள்ளக்கூடிய கார்ட்போர்ட் அட்டையைத் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 

(24) 


இப்பாத்திரத்தில் 2 லீற்றர் நீர் உள்ளது. இப்பாத்திரத்திலுள்ள சிறிய துளையிலிருந்து ஒவ்வொரு நிமிடமும் 200 மில்லிலீற்றர் நீர் கசிந்து வெளியேறுகின்றது. அதன்படி, அப்பாத்திரம் முற்றாக வெறுமையாவதற்கு எடுக்கும் நேரம்,

(1) 12 நிமிடங்கள் (2) 10 நிமிடங்கள் (3) 8 நிமிடங்கள்





(25) சரியான கருத்தையுடைய விடையைத் தெரிவு செய்க.

(1) கிரிக்கெட் ஒரு குழு விளையாட்டாகும். அது இலங்கையின் தேசிய விளையாட்டு அல்ல.

(2) மூல வர்ணங்கள் நான்கு உள்ளன. சிவப்பு வர்ணம் அவற்றில் ஒன்று ஆகும்.

(3) சதுரமுகிக்கு சதுர வடிவான முகங்கள் மாத்திரம் உள்ளன. தீப்பெட்டி அதற்கு உதாரணமாகும்.

(26) ஊடுகாட்டக்கூடிய செவ்வக வடிவமான பொலித்தீன் துண்டின் மீது வரையப்பட்ட படம் முதலில் காட்டப்பட்டுள்ளது. அந்த செவ்வக வடிவமான பொலித்தீன் துண்டின் நடுவிலுள்ள புள்ளிக்கோட்டின் வழியே அம்புக்குறி காட்டும் திசைக்கு மடித்த பின் புலப்படும் முறையைத் தெரிவு செய்க.

 (1)  (2)  (3) 

(27) ஒவ்வொன்றும் 10 சென்ரிமீற்றர் நீளமுள்ள 3 கடதாசிக் கீலங்கள் ஒரு தனிக் கடதாசிக் கீலமாக ஒட்டப்பட்டது. அக்கடதாசிக் கீலங்களை ஒட்டும்போது ஒவ்வோர் கடதாசிக் கீலத்தை ஒன்றின் மீது ஒன்று 2cm வைத்து ஒட்டப்பட்டது. ஒட்டிய பின் கிடைக்கும் தனிக் கடதாசிக் கீலத்தின் நீளம்,

(1) 30cm (2) 26cm (3) 24cm

(28) ஒரு வகுப்பிலுள்ள ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை, அவ்வகுப்பிலுள்ள பெண் பிள்ளைகளின் எண்ணிக்கையின் மூன்று மடங்காகும். இன்னும் 12 பெண் பிள்ளைகளை அவ்வகுப்பிற்கு புதிதாக சேர்க்கப்பட்ட பின் ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கையும் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கையும் சமன். அதன்படி, தற்போது வகுப்பிலுள்ள ஆண் பிள்ளைகளினதும், பெண் பிள்ளைகளினதும் எண்ணிக்கைகளாவன,

(1) ஆண் பிள்ளைகள் - 18, பெண் பிள்ளைகள் - 18 (2) ஆண் பிள்ளைகள் - 24, பெண் பிள்ளைகள் - 24

(3) ஆண் பிள்ளைகள் - 21, பெண் பிள்ளைகள் - 21

(29) இலக்கங்களுக்குப் பதிலாக குறியீடுகளை இட்டு "இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தாறு" எனும் எண் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

△ ○ ✳ □

இக்குறியீடுகளைப் பயன்படுத்தி அமைக்கத்தக்க மிகப் பெரிய எண்ணைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) ✳ ○ □ △ (2) ○ △ □ ✳ (3) ○ □ ✳ △

kalvi.lk

(30) ஒரு பெட்டியில் இடப்பட்ட பந்துகள் ஒவ்வொரு மணித்தியாலத்திலும் இரு மடங்காக அதிகரித்துச் செல்கின்றது. 6 ஆவது மணித்தியாலத்தில் பெட்டி பந்துகளினால் முழுவதுமாக நிரம்பியது. அதன்படி, பெட்டியின் அரைவாசி நிரம்பியது எத்தனையாவது மணித்தியாலத்திலாகும்?

(1) 3 ஆவது மணித்தியாலத்தில் (2) 5 ஆவது மணித்தியாலத்தில் (3) 4 ஆவது மணித்தியாலத்தில்

(31) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாவிற்கான விடையைத் தெரிவு செய்க.

“சுத்தமுள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு, நீ அதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே”

“கூழையே நீ குடித்தாலும்
குளித்த பிறகு குடி, அப்பா!
ஏழையே நீ ஆனாலும்
இரவில் நன்றாய் உறங்கப்பா”

இப்பாடலின்படி, சுத்தத்தை பேணுவதால் நாம் அடையக்கூடிய நன்மை அல்லாதது,

(1) சுகம் (2) நீண்ட ஆயுள் (3) உறக்கம்

(32) பெட்டியொன்றில் 4 சவர்க்காரக்கட்டிகள் அல்லது 16 தீப்பெட்டிகள் மட்டுமே வைப்பதற்கு இடவசதி உள்ளது. அப்பெட்டியில் ஒரு சவர்க்காரக்கட்டியுடன் எத்தனை தீப்பெட்டிகளை வைக்க முடியும்?

(1) 8 (2) 12 (3) 10

(33) நீலம், சிவப்பு, மஞ்சள் ஆகிய மூன்று மின்குமிழ்கள் முறையே 3, 6, 9 நிமிடங்களுக்கு ஒரு முறை ஒளிர்கின்றன. மூன்று மின்குமிழ்களும் பி.ப 9.00 மணிக்கு ஒளிர்ந்தால், அவை மீண்டும் ஒரே நேரத்தில் ஒளிரும் நேரம்,

(1) பி.ப 9.18 க்கு (2) பி.ப 9.09 க்கு (3) பி.ப 9.30 க்கு

(34) கீழே தரப்பட்டுள்ள தகவல்களின்படி, வினவப்பட்டுள்ள வினாவிற்கான விடையைத் தெரிவு செய்க.

- பெட்டி A யில் இருக்கும் பந்துகளின் எண்ணிக்கையைப்போல் இரு மடங்கு பந்துகள் பெட்டி C யில் இருக்கின்றன.
- A, C ஆகிய இரு பெட்டிகளிலும் உள்ள பந்துகளின் மொத்த எண்ணிக்கை பெட்டி B யில் உள்ள பந்துகளின் எண்ணிக்கைக்குச் சமனாகும்.
- பெட்டி C இலிருந்து இரு பந்துகள் பெட்டி B யிற்கு இடப்பட்டால் பெட்டி C இல் உள்ள பந்துகளின் எண்ணிக்கை 4 ஆகும்.


இத்தகவல்களின்படி, மூன்று பெட்டிகளிலும் உள்ள பந்துகளின் மொத்த எண்ணிக்கை,

(1) 22 (2) 12 (3) 18

(35) 31 நாட்களைக் கொண்ட ஒரு மாதத்தில் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை ஆகிய நாட்கள் ஐந்து வீதம் உள்ளன. அதன்படி, அம்மாதத்தின் 24 ஆம் திகதி என்ன நாளாகும்?

(1) செவ்வாய்க்கிழமை (2) திங்கட்கிழமை (3) புதன்கிழமை

(36)



வட்டத்திலுள்ள குறியீடுகளைப் பயன்படுத்தி DEEDS என்னும் சொல் எழுதப்பட்டுள்ளது.

அதற்கேற்ப  என்னும் குறியீடுகளைப் பயன்படுத்தி எழுதக்கூடியச் சொல்,

(1) END (2) BUS (3) SON

*** பின்வரும் பந்தியை வாசித்து, (37), (38), (39) ஆகிய வினாக்களுக்குரிய மிகச் சரியான விடைகளைத் தெரிவு செய்க.**

“இன்று சமைப்பதற்கு விறகு இல்லை” என்று அம்மா, அப்பாவிடம் சொன்னதாக நான் கேள்விப்பட்டேன். அப்பா எங்களுடன் காட்டுக்கு விறகு வெட்டுவதற்காகப் புறப்பட்டார். எனக்கு முன்னால் அப்பா மட்டும் நடந்தார். எனக்கு பின்னால் இரண்டு அண்ணாமார்கள் மட்டும் வந்தனர். விறகு வெட்டி அம்மா செய்த உணவை சாப்பிட தயாரானோம்.

(37) “விறகு வெட்டுவதற்கு ஆண்கள் மட்டுமே சென்றார்கள்” இக்கூற்று,

(1) சரியானது (2) பிழையானது (3) கூறமுடியாது


(38) “அம்மாவும் விறகு வெட்டுவதற்கு போனார்.” இக்கூற்று,

(1) சரியானது (2) பிழையானது (3) கூறமுடியாது

(39) “விறகு வெட்டுவதற்கு மொத்தம் நான்கு பேர் சென்றார்கள்.” இக்கூற்று,

(1) சரியானது (2) பிழையானது (3) கூறமுடியாது

(40)




ஒரு குறிப்பிட்ட தோட்டத்திலுள்ள ஒவ்வொரு வகை மரங்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களை இவ்வட்ட வரைபு காட்டுகிறது. தோட்டத்திலுள்ள தென்னை மரங்களின் எண்ணிக்கை 40 ஆகும். அதன்படி, தோட்டத்திலுள்ள மா மரங்கள் மற்றும் கொய்யா மரங்களின் மொத்த எண்ணிக்கை,

(1) 35 (2) 25 (3) 30

kalvi.lk

( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-08

# வினாத்தாள் - II

சுட்டெண் :- ..........................................................

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  * உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
  * மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.

**(01) பின்வரும் பந்தியை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

"நான் ஒரு குற்றமும் அறியேன் பிரபு! அரசாங்கம் எவ்வளவு கூறியும் கண்ணனும் அவரது குடும்பத்தாரும் அவர்களது வீட்டுச் சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்திருக்கவில்லை. தயிர்ச்சட்டிகள், யோகட் கோப்பைகள், சிரட்டைகள், பிளாஸ்டிக் கொள்கலன்கள், பழைய தயர்கள் போன்றவற்றை அங்குமிங்கும் வீசியிருந்தார்கள். மழைக்காலங்களில் அவற்றுள் நீர் தேங்கியும் இருக்கும். அதுபோல் குளிர்சாதனப்பெட்டியில் உள்ள தட்டுகளிலும் நீர் தேங்கியிருக்கும். அவற்றையும் அவர்கள் சுத்தம் செய்வதில்லை. நானும் எனது இனமும் விருத்தியடைய மனிதர்களே காரணம்." என்று நுளம்பு கூறியது.

(i) இப்பந்தியில் மனிதர்களைக் குறை கூறியது யார்? ..........................................................

(ii) இடப்பெயர்ச் சொல்லொன்றினைப் பந்தியிலிருந்து தெரிவுசெய்து எழுதுக. ..........................................................

(iii) "வெயில்காலம்" என்ற சொல்லின் எதிர்க்கருத்தை எழுதுக. ..........................................................

(iv) பந்தியில் வந்துள்ள இணைமொழிச் சொல்லை எழுதுக. ..........................................................

(v) விசிறியும் சுழியும் வந்துள்ள உயர்திணை இறந்தகால வினைச்சொல்லை எழுதுக. ..........................................................

**(02) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான இணைமொழியை அடைப்பினுள் இருந்து தெரிவுசெய்து தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

( அல்லும் பகலும் , திட்டவட்டமாகக் , பேரும் புகழும் )

(i) தந்தை தனது தீர்மானத்தைத் .......................................................... கூறினார்.

(ii) அதிபர் தனது பாடசாலை நலனுக்காக .......................................................... உழைத்தார்.

(iii) ஆதர் சி. கிளாக் எனும் விஞ்ஞானியின் .......................................................... எங்கும் பரவியது.

**(03) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள கருத்திற்குப் பொருத்தமான மரபுத் தொடரின் கீழ்க் கோடிடுக.**

(i) பெற்றோர் கூறியதை பிள்ளைகள் அவதானமாகக் கேட்டனர். ( செவி மடுத்தல், வயிற்றைக் கட்டுதல், கண் மூடுதல் )

(ii) அம்மா தனது மகன் பரீட்சையில் சித்தியடைய வேண்டுமென்பதற்காக உற்சாகப்படுத்தினார்.

( பொடி வைத்தல், தட்டிக் கொடுத்தல், அறை கூவுதல் )

**(04) பின்வரும் இடைவெளிகளுக்குப் பொருத்தமான இளமைப் பெயர்களை எழுதுக.**

(i) மீன் .......................................................... நீரில் நீந்திச் செல்வதைப் பார்த்தேன்.

(ii) நாங்கள் தோட்டத்தில் வாழைக் .......................................................... களை நட்டோம்.

**(05) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.**

(i) கல் + குழி :- .......................................................... (ii) பூ + சோலை :- ..........................................................

**(06) பின்வரும் சுருக்கக் குறியீடுகளின் விரிவை எழுதுக.**

(i) இ. மி. ச :- .......................................................... (ii) இ. பெ. கூ :- ..........................................................

**(07) கீழே கடிதமொன்றின் பிரதான பகுதிகள் சரியான ஒழுங்கில் அமைவதற்கு இரு வெற்றிடங்களுக்கும் பொருத்தமான பகுதிகள் இரண்டினையும் வெற்றிடங்களில் எழுதுக.**

அனுப்புபவரின் முகவரி , .......................................................... , விளிப்பு , .......................................................... , முடிப்பு , ஒப்பம்

**(08) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் அறிவித்தலாயின் ( √ ) எனவும், அறிவுறுத்தலாயின் ( X ) எனவும் கட்டளையாயின் ( 0 ) எனவும் எதிரே உள்ள அடைப்பினுள்ளே அடையாளமிடுக.**

(i) இரண்டாம் தட்டில் உள்ள பெட்டியிலிருந்து நீல நிறப் பந்துகளை எடுத்து வாருங்கள். ( )

(ii) எண் கோலத்தில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க. ( )

(iii) நாளை பரீட்சை நடைபெறும். ( )

kalvi.lk

**(09) அடைப்புக்குள் இருக்கும் சொற்களில் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) விளம்பரங்கள் ........................ ( கவற்ச்சியாக , கவர்சியாக , கவர்ச்சியாக ) அமைய வேண்டும்.

(ii) நீரைப் பெற்றுக்கொள்வதற்காக .......................... ( குளங்கள் , குலங்கள் , குழங்கள் ) பயன்படுத்தப்படும்.

(iii) கமலா தலை ........................ ( வளியால் , வலியால் , வழியால் ) அழுதாள்.

**(10) முதலில் வினவப்பட்டிருக்கும் வினாவிற்கான விடையைப் பூர்த்தி செய்க.**

In which grade are you? ............................................................... five.

**(11) கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்களை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) A ............. ( farmer / postman / doctor ) brings us letters.

(ii) Do you ............. ( read / cry / play ) cricket. (iii) A bird can ............. ( fly / swim / run )

**(12) கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்களாக எழுதுக.**

(i) do / like? / What / you :- ...................................... (ii) is / sister / This / my :- ......................................


**(13) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.**

சோறு சாப்பிடுங்கள் :- ..........................................................................

**(14) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

அன்வர் மெஹேற என்ன :- ..........................................................................

(15)




இவ்வுருவில் A, B என்பவற்றினால் காட்டப்பட்டுள்ள திசைகளை எழுதுக.

A :- ...................................... B :- ......................................

(16)




இக்கடிகார முகத்தினால் முற்பகல் நேரம் காட்டப்பட்டுள்ளது. அந்த நேரத்தை 24 மணித்தியாலக் கடிகார நேரத்தில் எழுதுக. ......................................

(17) XIII, XVIII, XIX, XV இந்த உரோம எண்குறிகளை பெரிய எண்ணில் இருந்து சிறிய எண் வரையிலான ஒழுங்கில் (இறங்குவரிசையில்) எழுதுக. ......................................

(18)

| | |
|---|---|
| 368 | 132 |
| 374 | 276 |


இக்கட்டத்தினுள் உள்ள எண்களுள் நான்கினால் மீதியின்றி வகுபட முடியாத எண் யாது? ..............

(19)




மேலே உருக்களினால் சதுர வடிவமான, வட்ட வடிவமான, செவ்வக வடிவமான கார்ட்போர்ட் அட்டைகள் காட்டப்பட்டுள்ளன. அதன்படி, இக்கார்ட்போர்ட் அட்டைகளை பயன்படுத்தி அமைத்துக்கொள்ளக்கூடிய திண்மங்கள் இரண்டின் பெயர்களை எழுதுக. .............................. ..............................

(20)



இவ்வுருவிற்கு எத்தனை சமச்சீர்க் கோடுகள் வரையலாம்? ..............................

(21)





தாயக்கட்டையொன்று 35 தடவைகள் மேலே சுண்டிவிடப்பட்டபோது ஒவ்வொரு இலக்கமும் விழுந்த தடவைகளின் எண்ணிக்கை அருகேயுள்ள வரைபினால் காட்டப்பட்டுள்ளது.

(i) இலக்கம் 3 விழுந்த தடவைகளின் எண்ணிக்கையை வரைபின் உரிய நிரலில் நிழற்றிக் காட்டுக.


(ii) இலக்கம் 5 விழுந்த தடவைகளின் எண்ணிக்கையை விட ஆறு தடவைகள் அதிகமாக விழுந்த இலக்கம் யாது? ..............................

(22)




இவ்வுருவினால் 1l கொள்ளளவுள்ள 4 சம பகுதிகளாக பிரிக்கப்பட்ட பாத்திரம் ஒன்று காட்டப்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதி நீரினால் நிரப்பப்பட்டுள்ளது. இப்பாத்திரத்தை முழுமையாக நிரப்புவதற்கு மேலும் எவ்வளவு நீர் தேவைப்படும்?..............................

(23)




இவ்வுருவினால் காட்டப்படும் A, B, C, D, E, F ஆகிய கோணங்களில்,

(i) செங்கோணங்களுக்குரிய ஆங்கில எழுத்துக்களை எழுதுக. ..............................

(ii) செங்கோணத்திலும் சிறிய கோணங்களுக்குரிய ஆங்கில எழுத்துக்களை எழுதுக. ..............................

(iii) செங்கோணத்திலும் பெரிய கோணங்களுக்குரிய ஆங்கில எழுத்துக்களை எழுதுக. ..............................

kalvi.lk

சுட்டெண்:-.............................................

(24) ஆசிரியரிடமிருந்த ஒரு தொகைப் புத்தகங்களை 15 மாணவர்களிடையே 6 வீதம் விநியோகித்த பின்னர் ஆசிரியரிடம் 24 புத்தகங்கள் எஞ்சியிருந்தன. அதன்படி, ஆசிரியரிடம் ஆரம்பத்தில் இருந்த புத்தகங்களின் எண்ணிக்கை யாது? ................

(25) (i) 5, 9, 1, 7, 4 ஆகிய ஐந்து இலக்கங்களையும் பயன்படுத்தி, நூறினிடத்தில் 5 உம், பத்தாயிரத்தினிடத்தில் 4 உம் வரும் எண்ணொன்றை எழுதுக. ................................................

(ii) அருகில் தரப்பட்டுள்ள எண்ணை விரித்து எழுதுக. 79648 = .................... + .................. + ............... + ............. + ....

(26) (i) பெட்டியொன்றிலுள்ள 10 பழங்களில் 0.4 பங்கு மாம்பழங்களாகும். மற்றவை அனைத்தும் பப்பாசிப்பழங்களாகும். அதன்படி, அப்பெட்டியிலுள்ள பப்பாசிப்பழங்களின் எண்ணிக்கை யாது? ......................

(ii) 3 , ☐ , 11 , ☐ , 19 , 23 இவ்வெண் கோலத்தில் உள்ள வெற்றுக்கூடுகளுக்குப் பொருத்தமான எண்களை வெற்றுக்கூடுகளிலேயே எழுதுக.

(27) ஒரு மீன் டின்னின் விலை ரூபாய் 640.00 எனவும், ஒரு சவர்க்காரக் கட்டியின் விலை ரூபாய் 120.00 எனவும் கடை ஒன்றின் விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆசிம் 2 சவர்க்காரக் கட்டிகளையும், ஒரு மீன் டின்னையும் வாங்கிக்கொண்டு வியாபாரிக்கு ரூபாய் 500.00 நாணயத் தாள்கள் இரண்டைக் கொடுத்தான் எனின், அவனுக்கு கிடைத்த மீதிப் பணம் எவ்வளவு? .............................

(28) 


(i) இச்செவ்வகத்தின் நீளம், அகலம் என்பவற்றின் கூட்டுத்தொகை யாது? ..............................

(ii) இச்செவ்வகத்தின் அகலத்தை விட நீளம் எவ்வளவு கூடியதாகும்? ..........................

(29) பரானா ஒரு புத்தகத்தை வாசிப்பதற்கு 3 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள் எடுத்தாள். அவள் அப்புத்தகத்தை பி.ப 2.30 இற்கு வாசித்து முடித்தாள் எனின், அவள் அப்புத்தகத்தை வாசிக்கத் தொடங்கிய நேரம் யாது? ..............................

*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) இலங்கையின் புராதன வரலாற்றைக் கூறும் நூல்,
(1) மகாவம்சம் (2) பைபிள் (3) பகவத்கீதை


(31) இலங்கையிலுள்ள மிக உயரமான அணைக்கட்டு மற்றும் மிக உயரமான நீர்வீழ்ச்சி ஆகியன ஒழுங்குமுறையில் எழுதப்பட்டுள்ள விடை,
(1) பொல்கொல்ல, தியலும (2) விக்டோரியா, பம்பரகந்த (3) ரன்தெனிகல, துன்கிந்த

(32) தேசப்படங்களில் அதிவேகப் பாதைகளைக் குறித்துக் காட்டப் பயன்படுத்தும் நிறம்,
(1) சிவப்பு (2) கறுப்பு (3) ஊதா

(33) பின்வரும் எத்தன்மை கொண்ட வித்துக்கள் நடுவதற்கு மிகவும் உகந்தது?
(1) நீரில் மிதக்கும் வித்துக்கள் (2) நீரில் அமிழும் வித்துக்கள் (3) நீரை உறிஞ்சும் வித்துக்கள்

(34) வீட்டுத் தோட்டப் பயிர்களுக்கு நன்மை செய்யும் பிராணிகள்,
(1) தும்பி, கும்பிடுபூச்சி (2) வண்டு, மயிர்க்கொட்டி (3) நத்தை, வெட்டுக்கிளி

(35) வேலைகளை இலகுவாகச் செய்ய சாய்தளம் பயன்படும் சந்தர்ப்பம்,
(1) அலவாங்கு மூலம் பெரிய கல்லொன்றைப் புரட்டிச் செல்லுதல்.
(2) கிணற்றிலிருந்து கப்பி மூலம் நீர் வாளியை இழுத்தல்.
(3) பலகையின் உதவியுடன் எண்ணெய் பீப்பாயை லொறியில் ஏற்றுதல்.

(36) 

துளைகள் இடப்பட்ட இப்பாத்திரத்தின் எந்த துளையினூடாக நீர் வேகமாக வெளியேறும்?
(1) B துளையில் (2) C துளையில் (3) A துளையில்

(37) இலங்கையில் நிலக்கரியை வலு சக்தியாகக் கொண்டு இயங்கும் மின்நிலையம்,
(1) நுரைச்சோலை (2) சப்புகஸ்கந்த (3) லக்சபான

(38) வெடித்துப் பரவும் வித்துக்கள்,
(1) நாயுருவி, கத்தாப்பு (2) இறப்பர், மஞ்சாடி (3) சீதேவியார் செங்கழுநீர், எருக்கலை

(39) தேசப்படங்களில் மலைகளைக் குறிக்க பயன்படும் நிறம்,
(1) பச்சை (2) நீலம் (3) கபிலம்


(40) விற்றமின் A குறைவினால் ஏற்படும் நோய்,
(1) கண் பார்வை குறைவடைதல். (2) எலும்பு நோய்கள் ஏற்படடல் (3) உடல் வளர்ச்சி குன்றுதல்.

(41) இலங்கையின் மிகப் பெரிய தாவரவியற் பூங்கா அமைந்துள்ள இடம்,
(1) ஹக்கல (2) கொழும்பு (3) பேராதெனிய

(42) 
மலசலகூடமொன்றின் கதவில் இக்குறியீடு காணப்பட்டது. இதனால் கருதப்படுவது,
(1) ஆண்களுக்கு மாத்திரம் (2) பெண்களுக்கு மாத்திரம் (3) சிறுவர்களுக்கு மாத்திரம்


(43) “தவில்” எனும் சங்கீத உபகரணம் இசைக்கப்படுவது,
(1) இரண்டு கைகளாலும் (2) தடிகளால் மாத்திரம் (3) கையாலும் தடியாலும்

kalvi.lk

(44)  இந்த உபகரணத்தின் பயன்பாடு அல்லாதது,

(1) திருகாணிகளைக் கழற்றுவதற்கும், இறுக்குவதற்கும் (2) போத்தலின் தக்கையை கழற்றுவதற்கு
(3) மீன் டின் மூடியை வெட்டுவதற்கு

(45) கீழே காட்டப்பட்ட எந்தச் சந்தர்ப்பத்தில் மின்குமிழ் ஒளிரும்?





(46) வாகன இலக்கத்தகடுகளில் ஆரம்பத்தில் காட்டப்படும் இரு ஆங்கில எழுத்துக்களும் குறிப்பது,

(1) வாகன உரிமையாளர் பதிவு செய்த மாகாணம். (2) வாகன உரிமையாளர் பதிவு செய்த மாவட்டம்
(3) வாகனம் உற்பத்தி செய்த வருடம்.

(47) 100m ஓட்டப் போட்டிகளில் காலம் கணிக்கப்படுவது,

(1) நிமிடங்களில் (2) மணித்தியாலங்களில் (3) செக்கன்களில்

(48) 

இவ்வுருவினால் புவி, சூரியன், சந்திரன் ஆகியன காட்டப்பட்டுள்ளன. அதன்படி, இங்கு A, B, C என்பவற்றால் காணக்கிடைப்பது,

(1) A-புவி, B-சூரியன், C-சந்திரன் (2) A-சூரியன், B-புவி, C-சந்திரன் (3) A-சந்திரன், B-சூரியன், C-புவி

(49) கலப்புணவு ஒன்றில் அடங்கும் உணவு வகைகள்,

(1) சோறு, இறைச்சி, மரமுந்திரிகை, கீரை வகை, பழ வகை. (2) சோறு, கரட், பூசனி, மரவள்ளி, ஈரப்பலா
(3) சோறு, முட்டை, பருப்பு, மீன், இறைச்சி

(50) நற்காரியங்களுக்குச் செல்லும்போது நீர் நிரம்பிய பாத்திரமொன்றைக் கையில் ஏந்திப் பெண்மணியொருவர் முன்னே வரும் நடைமுறையைக் கொண்டவர்கள்,

(1) முஸ்லிம்கள் (2) சிங்களவர்கள் (3) பறங்கியர்

(51) மஞ்சாடியைப் பயன்படுத்தி விளையாடப்படும் கிராமிய விளையாட்டு,

(1) பல்லாங்குழி (2) கிளித்தட்டு (3) சடுகுடு

(52) கண் நோய் ஏற்படும் பொழுது இத்தாவர இலைகளை அவித்த நீரினால் கண்கள் கழுவப்படும். அத்தாவரம்,

(1) மரமஞ்சள் (2) துளசி (3) மாதுளை

(53)  இவ்வுருவினால் காட்டப்படும் உடுத்தொகுதி,

(1) ஓராயன் (2) விருட்சிகம் (3) தென்சிலுவை

(54) வாகன சாரதிகள் வாகனங்களை ஓட்டும்போது வாகனங்களில் ஒலி எழுப்ப தடைசெய்யப்பட்டுள்ள இடங்கள்,

(1) அஞ்சல் அலுவலகம், பாடசாலை (2) சந்தை, பிரதான பேருந்து தரிப்பிடம் (3) நீதிமன்றம், வைத்தியசாலை

(55) திடீரென தீப்பற்றிக்கொண்ட ஒருவருக்கு உடனடியாகச் செய்ய வேண்டியது,

(1) நிலத்தில் விழுந்து புரளுமாறு ஆலோசனை வழங்குதல். (2) உலர் சாக்கினால் போர்த்திவிடுதல்.
(3) விரைவாக ஓடுவதற்கு ஆலோசனை வழங்குதல்.

(56) பூக்களில் தேனைக் குடிப்பதற்கு வரும் பிராணிகளின் கூட்டம் அல்லாதது,

(1) தேன்சிட்டு, வண்ணத்துப்பூச்சி (2) மயிர்க்கொட்டி, செவ்வெறும்பு (3) தேனீ, அணில்

(57) புற்கள் வளர்ந்துள்ள தரை ஒன்றின் மீதுள்ள மரப்பலகையைத் தூக்கியபோது பலகையின் கீழ் உள்ள புற்கள் மஞ்சள் நிறமாகக் காணப்பட்டன. இதற்கான காரணமாக அமைவது,

(1) பசளை கிடைக்காமை (2) சூரிய ஒளி கிடைக்காமை (3) நீர் கிடைக்காமை

(58) சுதந்திர இலங்கையின் முதல் பிரதமர்,

(1) டீ. எஸ். சேனாநாயக்க (2) வில்லியம் கோபல்லாவ (3) சிறிமாவோ பண்டாரநாயக்க

(59) தானியங்களில் உள்ள தோல்கள், சிறிய உடைந்த பகுதிகளை வேறாக்குவதற்காக பயன்படுத்துவது,

(1) அம்மி (2) அரிதட்டு (3) சுளகு

**(60) "எனக்கு வானத்தில் பறந்து செல்ல முடியுமாயின்" எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)**

(1) ..............................................................................................................................

(2) ..............................................................................................................................

(3) ..............................................................................................................................

kalvi.lk